# பிறவாமை

மனிதன் பரிணமித்தானா? படைக்கப்பட்டானா? இந்த உலகம் தோன்றியதா? தோற்றுவிக்கப்பட்டதா? கோள்கள் தோன்றினவா? தோற்றுவிக்கப்பட்டனவா?

இப்பூவுலகில் மனிதனையும் மற்ற ஜீவராசிகளையும் வாழ வைத்துக் கொண்டிருக்கும் பஞ்சபூதங்கள் மற்றக்கோள்களில் வித்தியாசமான விகிதங்களிலே உள்ளனவா அல்லது வேறு ஆற்றல்களாக உள்ளனவா? என்றெல்லாம் எண்ணற்ற வினாக்களுக்கு விடைகாண உலகில் ஒவ்வொரு நாட்டின் விஞ்ஞானிகளும், அறிவியளாலரும் முயன்ற வண்ணம் உள்ளனர்.

இந்த பிரபஞ்ச இரகசியங்களை புரிந்து கொள்ள பெரு முயற்சி மேற்கொண்டுள்ள சிலர் அவ்வப்போது அறிவித்திடும் ஆய்வு முடிவுகளை நம்மில் பெரும்பான்மையோர் புரிந்து கொள்ளக்கூட முயல்வதில்லை?

மனிதனின் எண்ணும் ஆற்றலை, படைப்புத்திறனை சற்று பின்னோக்கிப் பார்த்தோமானால் எகிப்து – பாபிலோனியா நாகரிகம், சிந்துவெளி நாகரிகம் என ஒரு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, இன்றைய மனிதன் வியந்து நிற்கும் அளவிற்கு பலதுறைகளில் சாதனையாளனாக திகழ்ந்தது பற்றி அறிகிறோம். ஆனால் ஏனோ? எப்படியோ? அந்த நாகரிகம் – அன்றைய சாதனைகள் அப்படியே வளர்ச்சி காணாமல், தடைப்பட்டு, தாமதப்பட்டு, திசை மாறிவிட்டது என்றே கூறலாம்.

வேதகாலத்திலிருந்து இன்றுவரை மனிதன் படைத்திட்ட நூல்கள் – பக்தி இலக்கியங்கள் – மதக்கோட்பாடு விளக்க நூல்கள் எண்ணற்றவை – ஏராளமானவை. இவையெல்லாம் மனித சமுதாயத்தை எங்கு அழைத்துச் சென்றன – செல்கின்றன?

மனிதனுடைய வாழ்க்கைப்பயணத்தின் – பிறவிப் பெருங்கடலின் இறுதி இலக்கு? (Ultimate Objective) முக்தி அடைவது மோஷலோகம் செல்வது என்றே பேசப்பட்டும் – கற்பிக்கப்பட்டும் பல நூற்றாண்டுகளாக நமது மனம் பக்குவப்படுத்தப்பட்டு விட்டது ( Mind Conditioning).

“பிறவாமை” தான் முக்கிய பிரார்த்தனையாக முன்வைக்கப்பட்டது. அடுத்த பிறவியே இல்லாமல் பரமாத்மாவோடு ஐக்யமாதலையே மோக்ஷம் என்றும், முக்தி என்றும் பெயரிட்டு பிறவாமை வேண்டியே பிரார்த்தித்து இருக்கிறார்கள், மகாத்மாக்களும் மாமனிதர்களும்.

ஆதி சங்கரர் துவங்கி, இராமானுஜர், நாயன்மார்கள், ஆழ்வார்கள்

என அத்தனை தவசிரேஷ்டர்களும், மகான்களும், மனிதனின் இறுதி இலக்காக அறிவித்தது பிறவாமை – பிறப்பறுத்தல் – முக்தி அடைதல்.

ஏன் இந்த பிறவாமை பிரார்த்தனை? இப்பிறவியின் பால் இவர்கட்கெல்லாம் ஏன் இந்த சலிப்பும் – வெறுப்பும்? மீண்டும் பிறவி வேண்டாம் என இவர்களெல்லாம் அழுது அரற்றி அல்லவா இறைவனிடம் இறைஞ்சிருக்கிறார்கள்.

மணிவாசகர் தனது சிவபுராணத்தில் எத்தனையோ பிறவி எடுத்தேன், இளைத்தேன், உன் கழலடி எப்போது சேர்வேன் என உருக்கமாக விண்ணப்பிக்கிறார்.

பிறவிப்பெருங்கடல் என்கிறார் வள்ளுவர்பெருந்தகை. பிறவியைப் பெருங்கடல் என அடையாளம் காட்டுவது ஏன்? மனிதன் தனது துர்குணங்களான, கோபம், ஆத்திரம், பொறாமை, பேராசை, ஆணவம் இவைகளை விடவே மாட்டான் என்ற ஐயப்பாடா?

எவ்வளவுதான் நன்னெறி போதித்தாலும், கடைநிலை வாழ்வை, அவநம்பிக்கைகளை மூட நம்பிக்கைகளை – விடவே மறுக்கின்ற ஏராளம், ஏராளமானோர் நாளுக்கு நாள், ஆண்டுக்கு ஆண்டு பெருகிய வண்ணம் உள்ளனரே. இந்த நிலை மாறவே மாறாதோ? என்ற விரக்தியினால் அவர்கள் "பிறவாமை" வேண்டும் என்ற விண்ணப்பித்தார்களோ!! சரி. அவர்கள் கோரிக்கையை நிறை வேற்றிக்கொண்டார்கள். இறைவனோடு இரண்டறக்கலந்துவிட்டார்கள் என்று தானே பக்தி இலக்கியங்களும் புராணங்களும் நமக்குக் கற்பிக்கின்றன.

பிறவாமை வேண்டிய சிலர் மட்டும் இறைவனோடு ஐக்யமாகி விட்டார்கள். ஆனால் தொழுதுண்டு பின் செல்லும் தொண்டர்களாகிய நாம் கடைத்தேறாமல் ஆயிரம் கடவுள்களைத் தொழுகிறோம். நூற்றுக்கணக்கான சடங்குகளை உறுதியாகப் பற்றிக் கொண்டுள்ளோம். காரண காரியம் அறிந்து கொள்ளும் ஆர்வமும், துணிவுமின்றி பரம்பரை பரம்பரையாக சடங்குகளை சிரத்தையோடு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

நலம் பெற்றோமா? நன்னிலை உற்றோமா? மனித நேயம் மலர்ந்ததா? ஆன்ம நேயம் பிறந்ததா? பிறதின் நோய் உணர்கிறோமா? பொறாமைத்தீயில் பொசுங்கி, ஆணவச்சேற்றில் புதைந்து அல்லற்பட்டுக்கொண்டு இருக்கிறோம்.

விவேகானந்தர் சொன்னார் "ஏ! மனிதா ! என் சகோதரனே! இந்தப் பிரபஞ்சத்தில் விரிந்து கிடக்கும் பேராற்றல் அப்படியே உன் உள்ளத்தின்

உள்ளேயும் உன் உடல் முழுவதுமாக நிறைந்து கிடப்பதை உணர்ந்துகொள்! வீறு கொண்டு எழு! உன் சக்தி அபரிமிதமானது!"

ஔவையார் படினார்: **"அரிது - அரிது மானிடராய்ப்பிறப்பது அரிது''** இந்தப்பாடலை அவர் முருகப்பெருமானிடத்திலேயே பாடிக்காண்பித்து பாராட்டும், ஆமோதிப்பும் பெற்றதாக புராணக்கதைகள் பேசுகின்றன.

எத்தனை பிறவி? வள்ளுவர் சொல்லிச் சென்ற எழுமை ஏழு பிறப்பா? அல்லது ஆண்டாள் அருளிய ஏழேழ் பிறவியா? என்றெல்லாம் நாம் அடுத்த பிறவி பற்றிய அச்ச உணர்வு கொள்ளாமல் இப்பிறவி - இந்தவாழ்வு - மரணமிலாப் பெருவாழ்வாக அமைந்திட - அமைத்திட சிந்திப்போம். முயற்சிப்போம் என "இறவாமை" பற்றி பேசினார் நமது வள்ளலார். பிறவா வரம் கேட்க வேண்டாம். அடுத்த பிறவி பற்றி அச்சப்படல் வேண்டாம். இந்த அரிது அரிதாகக் கிடைத்திட்ட மனிதப்பிறவியை மாண்புடையதாக்கி, மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்திட, கூவி அழைக்கிறார் வள்ளலார். படியுங்கள் இந்தப் பாடலை:

**மடிந்தாலும் பொய் கூறேன் மானுடற்கே**
**நலிவுமில்லை, சாவுமில்லை, கேளீர்! கேளீர்!!**
**நாணத்தைக்கவலையினை, சினத்தை, பொய்யை**
**அச்சத்தை வேட்கைதனை அழித்து விட்டால்**
**அப்போது சாவுமங்கே அழிந்து போகும்**
**மிச்சத்தைப்பின் சொல்வேன் சினத்தைமுன்னே**
**வென்றிடுவீர் மேதினியில் மரணமில்லை!**

- வள்ளலார்

படித்த பின் பதியுங்கள் உங்கள் மனத்தகத்தே. பயின்றிடுவோம் விரைவாக! சினத்தை வென்றிடுவோம் வாரீர் ! வள்ளலார் வழி நடப்போம் வாரீர்! வாரீர்!

# என் தலையெழுத்து !!

**இட்ட படி என் தலையில் இன்னபடி என்றெழுதி விட்ட சிவனும் செத்துவிட்டானோ? முட்ட முட்ட பஞ்சமேயானாலும் பாரம் அவனுக்கே அன்னாய் நெஞ்சமே, அஞ்சாதிரு !**

பிறந்த குழந்தையை, ஆற்றில் மிதக்க விட்டு தன் கணவன் பின் செல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளான தாய், கலங்கிய உள்ளத்தோடும், பெருகி வழியும் கண்ணீரோடும் நிற்கும் போது, அந்தக் குழந்தை தன் அன்னையைப் பார்த்து சொன்ன வாசகம் தான் மேலே காணப்படும் பாடல்.

ஔவையார் பிறப்பு பற்றிய ஒரு கர்ண பரம்பரைக் கதை தான் இது. நமது இப்போதைய நோக்கம் ஔவையார் பிறப்பு பற்றிய ஆய்வல்ல. அந்தப்பாடலில் அழுத்தமாக உணர்த்தப்படும் தலை எழுத்து பற்றி சிரத்தையோடு சிந்தித்துப்பார்ப்பது தான் இந்தக்கட்டுரையின் நோக்கம்.

நினைத்தது நடக்காத போது, தீராத நோயினால் உறுத்தும் போது, விபத்துக்களால் இழப்பு ஏற்படும் போது, தொடர்ந்து தோல்விகளை சந்திக்கும் போது, பிள்ளை பாக்யம் கிடைக்காத போது, பிறந்த பிள்ளை ஊனத்தோடு பிறக்கும் போது, அகால மரணங்கள் நிகழும் போது இப்படி கணக்கற்ற சந்தர்ப்பங்களில் எண்ணற்ற மனிதர்களின் புலம்பல் :–

என் தலை எழுத்து நான் என்ன முயற்சித்து என்ன பயன்? அன்றெழுதி விட்டதை அழிக்கவா முடியும்? இவ்வகை புலம்பல் நமது கையற்ற நிலையை வெளிப்படுத்திக் கொள்ளவும், வருந்தும் மனதிற்கு சிறதளவு ஆறுதல் தருவதாகவும் அமைகிறது. தொன்று தொட்டு இதே நிலைப்பாடு, தலைஎழுத்து – விதி – ஊழ் எனும் இவைபற்றிய சிந்தனை புராண, இலக்கிய காலங்களிலிருந்து இப்படியே தொடர்கிறதே !

மாற்றவே முடியாதா இத்தகு மனப்பாங்கு ? (For Centuries our minds are so conditioned) தலை எழுத்து பற்றி நாம் புரிந்து கொண்டிருப்பது, பொருள் கொண்டிருப்பது தான் என்ன ?

மாந்தர் அனைவர்க்கும் பிறக்கும் போதே அவரவர் வாழ்வில் இத்தகு துன்பங்கள் – இடர்ப்பாடுகள் தோல்விகள் – நோய்கள் உறுதியாக ஏற்படும் என்று எழுதப்பட்டு விடுகிறதா? இன்னபடி என்றெழுதி விட்ட சிவனும் செத்துவிட்டானோ என்ற அந்தப்பாடலில் வரிக்கு இது தானா பொருள் ?

ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த தலை எழுத்து தத்துவத்தை கொஞ்சம் ஆழமாக சிந்திப்போமா? பல நூற்றாண்டுகளுக்கு

முன்பிருந்தே பண்டிதர்களாலும் பாவலர்களாலும் எழுதப்பட்டும் – உபதேசிக்கப்பட்டும் – முழுமையாக நம்பப்பட்டும் வருகின்ற தலை எழுத்தை நாமும் சற்று விரிவாக விளங்கிக் கொள்ள முயல்வோமா ?

அனைத்து மாந்தரின் தலையிலும் அவரவர் வாழ்வில் நடக்க இருக்கும் அத்தனை நிகழ்வுகளும் நிர்ணயக்கப்பட்டு அதுபற்றிய வாசகங்கள் தலை எழுத்தாக இறைவனால் எழுதப்பட்டு விடுகிறது. இது தான் நமது நம்பிக்கை. என்ன மொழியில் எழுதப்பட்டிருக்கும்? அவை சங்கேதக் குறியீடுகளாக இருக்குமா? மூளையின் எந்தப்பகுதியில் எழுதப்பட்டிருக்கும் என்றெல்லாம் வினவாமல் அப்படியே தலை எழுத்தை – தலைவிதியை ஏற்றுக்கொண்டோம்.

**ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினும் தான்முந் துறும்** – குறள் 380

வலிமைமிக்கது ஊழ் என பயமுறுத்திவிட்டார் திருவள்ளுவர். ஆனால் அதே திருவள்ளுவர்

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்** – குறள் 620

ஏ, மனிதனே! உன்னால் ஊழையும் வெல்லமுடியும் என்று மனிதனிடம் உள்ள பேராற்றலை பறை சாற்றுகிறார். நம்பிக்கை நல்லதுதான். தீவிர நம்பிக்கை தேவையான பலன்களை நிச்சயமாக தரும். ஆனால் எதை நம்புகிறோம் – ஏன் நம்புகிறோம், பலாபலன்களை அவ்வப் போது கொஞ்சம் ஆய்வு செய்து (Review) தேவையான நல்ல மாற்றங்களை செய்தால் கூடுதலான பயனோ, குறைவான அளவில் துன்பமோ கிடைத்திடுமல்லவா ? ஆதிசிவன் – அகண்ட பரிபூரணன், முதல் மனிதனின் தலையில் எழுதியது நற்சிந்தை – நற்பண்பு – நல்லொழுக்கம் இவைகளைத் தரவல்ல சிந்திக்கும் ஆற்றல் கொண்ட மூளையைத் (Brain Power) தான் கொடையாக அளித்தான்.

அன்றும் இன்றும் நாம் வணங்குகிற அத்தனை தெய்வங்களும் நம்மிடம் எதிர்பார்ப்பதெல்லாம் நன்னெறிகளையும் நற்பண்புகளையும் தான். ஆனால் நாமோ, அவனுக்கு நம் தலையில் எழுதும் வாய்ப்பினை அதற்குப்பிறகு வழங்கவே இல்லை. நம் தலையில் நாமேஎழுதிக்கொண்டோம். எப்படி ?

நமக்கு அளிக்கப்பட்ட கொடை அரிதானது அளப்பரிய ஆற்றல் கொண்ட (Infinite Power) மூளையை அளித்தான் படைத்தவன். நாமோ, செருக்கால், சீற்றத்தால், பேராசையால் தீவினைகளையே நாடிச்

சென்றோம். நமது சந்ததிகளுக்கு தலையெழுத்தாக பகிர்ந்தளித்து மாற்ற முடியாதா என ஏங்கித்தவிக்கிறோம். யாரையும் தோல்வியுறச்செய்வது நமது நோக்கமல்ல. நாம் தோல்வியுராமல் – தளர்ந்து போகாமல் – துவண்டுவிடாமல் காத்துக் கொள்வது தான் இப்போதைய தலையாய நோக்கமாக இருத்தல் வேண்டும்.

விதியோ – ஊழோ – வலிமைமிக்கதாக – மாற்றவே முடியாததாக இருந்து விட்டுப் போகட்டும். அதை தோல்வியுறச் செய்வது, நமது விருப்பாக இருக்க வேண்டாம். விதியால் நாம் தோல்வியுறாமல் தளர்ந்து போகாமல் – காத்துக்கொள்வோம். இன்றைய சமுதாயத்தின் அவசரத் தேவை – அவசியத் தேவை இதுதான். இதுவே தான் முதல் மனிதனுக்கு அளிக்கப்பட்ட எண்ணுந்திறன் (Brain Power). நாளடைவில் முன்னேற்றம் கண்டிருக்க வேண்டும். எண்ணிக்கையில் குறைந்தவர்கள் எண்ணும் ஆற்றலை வளர்த்துக்கொண்டு சாதனையாளர்களாக உலகை இன்னமும் வாழவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**இலர்பல ராகிய காரணம் நோற்பார்**
**சிலர்பலர் நோலா தவர்** – குறள் 270

எண்ணங்களை உழுதுண்டு வாழ்பவர் சிலராகவும் தொழுதுண்டு பின் செல்பவர் பலராகவும் பற்பல நூற்றாண்டுகளை கழித்தன் விளைவுதான் இன்னும் பல கருத்துகளை – சடங்குகளை – நம்பிக்கைகளை அப்படியே ஏற்றுக்கொண்டு மாற்றி எண்ணவோ – மெருகூட்டி முன்னேறவோ துணிச்சலில்லாமல், என் விதி, என் நேரம், என்றே வாழ்நாளெல்லாம் பெரும்பான்மையோருக்கு வீணாகிக் கொண்டிருக்கிறது. மாதா–பிதா செய்தது மக்களுக்கு ஆகும் எனும் பழங்கூற்று அப்பட்டமான உண்மை.

நமது முன்னோர் நமக்கு மரபுவழி அளித்தது தான் நமது தலையெழுத்து. ஒரு நாலைந்து தலைமுறைக்குள் உலக மாந்தர் தலையெழுத்தை நாம் மாற்ற இயலும் இக்கூற்றினை நம்புங்கள். நம் சிந்தையில் தெளிவு, செயற்பாடுகளில் நேர்மை, என உறுதியாக ஒரு ஐந்து தலைமுறைகள் வாழ்ந்து முடித்தால் ஆறாவது தலைமுறை அற்புதமான சமுதாயமாக உருவாகும். வெறும் பேச்சல்ல. உண்மை. முற்றிலும் உண்மை.

புலம்பலை விடுமின் ! புதுவழி காண்மின் !

# பழையன கழிதலும், புதியன புகுதலும்...

அமைதியாக, ஆழ்ந்து, சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்திட வேண்டிய அருமையான சொற்றொடர்.

பயன்பாட்டில் பழைமையான பாண்டங்கள் – பண்டங்கள் உபயோகப்படுத்த முடியாத நிலையில் உருக்குலைந்து போன ஆடை அணிகலன்கள் – வாகனங்கள் – பழுதாகிவிட்ட இயந்திரங்கள் சிதிலமடைந்த சிற்பங்கள், சிதைவுற்ற உறைவிடங்கள் என தங்கள் பயன்பாட்டால் பயனற்றுப் போனவைகள் நாம் பழையன என்கிறோமா?

நெடுங்காலமாக நம் மனத்தகத்தே மண்டிக்கிடங்கும் மன மாசுகளாகிய பொறாமை – பேராசை, வஞ்சினம் – வன்மம் இவைகளை பழையன என அடையாளங் காட்டி அகற்றிட முனைகிறோமா?

தொன்று தொட்டு நாம் கடைப்பிடிக்கும் சடங்குகளை பழையன எனலாமா? சரியான காரணங்களை அறிய முற்படாமலே அளப்பரிய மூட நம்பிக்கைகளில் புதைந்து கிடக்கிறோமே அவைகளைப் பழையன என சுட்டலாமா?

நமது கலை – கலச்சாரம் – பழக்க வழக்கங்கள் மத நம்பிக்கைகள் – சாதிப்பற்று – போதனாமுறை – வழிபாட்டு முறைகள் இப்படி இந்த பழையன பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

இப்போதைய தேவை நிதானமாக – ஆழ்ந்த சிந்தனை (A critical Review of our Thoughts & Deeds) எத்தகு பழையன கழித்திடல் வேண்டும். பழையன அனைத்தையும் கழித்திடல், அறிவார்ந்த செயல் ஆகாது. ஆனால் பழையன என்பதற்காகவே அவைகளைப் போற்றிக் கொண்டே புதியவைகளை நிராகரிப்பதும் நன்னெறி ஆகாது.

கற்காலம் – அதற்கும் முற்காலம் – அப்போதைய மனிதனின் எண்ணம் – சொல் – செயல் அந்தப் பழைமை கழிந்தது, கழிக்கப்பட்டது. மனதின் எண்ணம் ஏற்றமுற்றது. புதியன புகுந்தது. அதுதானே நாகரீகம்.

இப்படி ஏற்றம் கண்டு பயணித்து வந்த மனிதன் வேதங்கள் செய்தான் – உபநிஷத்துகளை வழங்கினான் – வேள்விகளும் – யாகங்களும் விவேகத்தின் அடையாளங்கள் என்று பெருமிதப்பட்டான். புராணங்கள் – இதிகாசங்கள், சாத்திரங்கள் வர்ணாசிரம் விதிமுறைகள் என படிப்படியாக பற்பல மாறுதல்களை மனித சமுதாயம் கடைப்பிடித்து எதையோ நோக்கிப் பயணித்தது.

புத்தர் வந்தார் – வேதங்கள் சொன்ன வேள்விகள் அர்த்தமற்றது – பயனற்றது – தேவையற்றது என விளக்கினார் அவர் கருத்துக்கள் பலரால் ஏற்கப்பட்டன.

மகாவீரர் – ஏசுநாதர் – முகம்மது நபிகள் குருநானக் – ஆதிசங்கரர் – இராமானுஜர் – இராமகிருஷ்ணர் – இராகவேந்திரர் – விவேகானந்தர் – இராமலிங்கர் – காந்தி அண்ணல் வரை வந்தவர் யாவரும் பழையன கழித்து புதியன போதித்தவர்கள் தான். இவர்கள் தங்கள் இலட்சியங்களில் முழுமையான அர்ப்பணிப்பை அளித்து மாமனிதர்களாய் உயர்ந்தவர்களே தவிர, இவர்களை பின் பற்றுவோர், **இவர்கள் அளித்த புதிய கோட்பாடுகளை முழுமையாகப் புரிந்து கொள்ளவுமில்லை – தங்களை அர்ப்பணித்துக்கொண்டு அடுத்து அடுத்து அடியெடுத்து வைத்து உத்தமர்களாய் உயரவுமில்லை. அருளாளர்களாக அன்பைப்பொழியும் நல்லவர்களாக மாறவுமில்லை.**

எவையெல்லாம் மறுக்கப்பட்டதோ – தீயன என்று தள்ளப்பட்டதோ இவைகளில் தோய்ந்து தங்களை அழித்துக்கொண்டு அதே நேரத்தில் பக்திமான்களாக துதி மட்டும் பாடும் பாமரன்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இப்போதைய அவலநிலை : பழையனவற்றின் பெருமைகளை புரிந்து கொள்ளாமலும், புதியவற்றின் சிறுமைகளை புறந்தள்ளும் துணிவு இல்லாமலும் சமுதாயத்தை குற்றங்களின் விளைநிலமாக ஆக்கிக்கொண்டிருக்கிறோம். இது மிகையல்ல, உண்மை.

இந்த இழிநிலையை ஏற்றுக்கொள்ளும் (compromiser) மனப்பக்குவத்தைப் பெறுவது தான் அறிவுடையமை என நம்மில் பெரும்பான்மையோர் (with indifferent attitude) எனக்கென்ன) என்று வாழ்ந்து கொண்டிருப்பதும் மறுப்பதற்கில்லை. ஔவையார் இப்போது இருந்தால் கொடியது எது எனக்கேட்பின் குற்றங்களை நியாயப்படுத்த முயன்று கொண்டிருக்கும் கொடுமையைக் கண்டு கொதித்துப் போகிறேன் என பாடியிருப்பார். நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் போலி வாழ்க்கையை துணிச்சலாக பாடியிருப்பார். இந்த இழிநிலையைப்போக்க முயற்சி மேற்கொள்வதற்கு மாறாக இந்நிலையை ஏற்க முயற்சி மேற்கொள்கிறோமே இதுதான் கொடுமையிலும் கொடுமை!! சரி நீங்கள் பின்நோக்கியா? முன்நோக்கியா?

பின்னால் பார்த்துக் கொண்டே இருப்பது கடினம். முன்னாலே பார்ப்பதும் – முன்னேற்றம் காண்பதும் தான் நலம் தரும். நம்முன்னோர்க்கும் பயன்தரும். ஆகவே, பழையன அனைத்தையும்

செம்மைப்படுத்துவோம் (Let us Recondition Them Redefine Them) புதியன புகுத்துமுன் ஆய்வு செய்வோம். புகுத்தும் புதியன அனைத்திலும் மனிதநேயம் பிரதானமான இடம் பெற்றிடுமாறு உறுதிசெய்வோம். புதியன எவை இதோ :-

**நமது சிந்தனையில்** தூய்மை, எண்ணத்தில் ஏற்றம், நேற்றைய பிழைபட்ட எண்ணம் இன்று நிச்சயமாக நீக்கப்பட வேண்டும்.

**நமது சொற்கள்** கேட்பவர்களை (வீட்டிலும் வெளியிலும், எங்கணும்) ஈர்க்கும் இனிமையும் - வலிமையும் உள்ளதாக இருக்க வேண்டும்.

**நமது செயல்கள்** நடுநிலை பிறழாத ஆக்கந்தரும் செயல்களாக அமைய வேண்டும். இப்போதைய நமது இலக்கு இவைகளாக இருப்பின் சமுதாயம் செழிக்கும். ஒரு விண்ணப்பதை வைத்துக் கட்டுரையை நிறைவு செய்கிறேன். “பிறவாமை” வேண்டி பிரார்த்தித்து இருக்கிறார்கள் நமது முன்னோர்களில் மிகப்பலர். மரணமில்லாப் பெருவாழ்வு வாழ வழிகாட்டுகிறேன் என்றார் வள்ளலார். அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்றார் ஔவையார். ‘‘பிறவாமை’’ பழைய கருத்தென கழித்திடுவோமா? ‘‘பிறவாமை’’ தான் மனிதப்பிறவியின் முக்கிய குறிக்கோள் எனப் போற்றி பாதுகாப்போமா?



1970 ம் ஆண்டுக்கு முன்பு வடலூாரில் தைப்பூச ஜோதி தரிசனத்தை
காண திரண்டு இருந்த இலட்சக்கணக்கான மக்களில் ஒரு பகுதியினர்

# மாற்றங்கள் !

## ஏற்றங்களா ? ஏ... மாற்றங்களா ? ?

மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. அகண்ட பிரபஞ்சத்திலுள்ள அத்தனை கோள்களும் நமது பூகோளம் உட்பட ஒளிர்ந்து கொண்டிருக்கும் அத்தனை நட்சத்திரங்களும் கணத்துக்கு கணம் மாறுதலுக்கு உட்பட்டுக் கொண்டே உள்ளன, என அறிவியலார் தங்கள் ஆய்வுகளை சான்றுகளோடு அவ்வப்போது அறிவிக்கின்றனர்.

அவை பற்றி மேலும் அறிந்து கொள்வது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. **மனிதன் எதிர் கொண்ட மாற்றங்கள் ஏற்படுத்திய மாற்றங்கள் – ஏற்றுக் கொள்ளுமாறு திணிக்கப்பட்ட மாற்றங்கள்** பற்றியெல்லாம் சிறிது சிந்திப்போம் !

இயற்கை நிகழ்த்தும் அற்புதங்களாகட்டும், இடர்ப்பாடுகளாகட்டும், நமது விருப்பத்திலோ, கட்டுப்பாட்டிலோ இல்லை. எனவே, அதை விடுத்து மனிதனின் செயற்பாடுகளை மட்டும் ஆய்வு செய்வோம். சிந்திக்கத் தெரியாத ஒரு காலம். மெல்ல மெல்ல எண்ணங்கள் உதித்தன !

எண்ணங்களை வெளிப் படுத்தத் தெரியாத ஒரு காலம். மெது மெதுவே வாய்பேசப் பழகியவுடன் மொழிகள் வளர்ந்த ஒரு காலம். பேசும் மொழி, எழுத்துக்களுடன் – இலக்கண இலக்கியங்கள், வளர்ந்த ஒரு காலம். சிறு குழுக்கள், சமுதாயமாக, வெவ்வேறு இனங்களாக வடிவெடுத்த ஒரு காலம். உணவு, உடை, உறையுள், சாலைகள், பயணம் செய்ய ஊர்திகள் என அறிவு வளர, அறியாமை விலக அனைவருக்கும் கல்வி என சமுதாய நோக்கோடு ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும் உருவாக்கி கற்றுத்தேர்ந்து, கற்பித்து மாற்றங்களை நிகழ்த்தியவாறு ஏற்றம் – முன்னேற்றம் கண்டு கொண்டிருக்கும் மனிதன், கடந்த ஒரு நூறு ஆண்டுகளில் நிகழ்த்திய மாற்றங்கள் பற்றி மட்டும் உற்று நோக்குவோம்.

உணவு – உடை – உறையுள் – கல்வி – மருத்துவம் – தொழில் – விவசாயம் – வாணிபம் – தகவல் பரிமாற்றம் – விண்வெளி ஆய்வு– பயணத்திற்கான பாதைகள் – ஊர்திகள் என எத்தனை எத்தனை துறைகள். அனைத்திலும் அபரிமித மாற்றம் – வியத்தகு முன்னேற்றம்.

**1. உணவு :** அரிசிச்சோறு – கேழ்வரகுக் கூழ் – கம்பு, சோளம் எனும் தானிய வகைகளால் தயாரிக்கப்பட்ட உணவு. ஒரு வேளை அல்லது இருவேளை என உண்டு பழகியவன் உணவையே மருந்தாகக் கையாண்டு நோய்களை வர விடாமல் வாழ்ந்தவன் இன்று அறுசுவை உணவென வகை வகையாகத் தயாரித்து இறைச்சியை மட்டுமே விதவிதமாகத்

தயாரிக்கும் மிகப் பெரிய உணவகங்களை உருவாக்கி நாள் பூராவும் அருந்துமாறு நாகரிக பானங்களை விற்பனை செய்து பெரும்பான்மையோர் மருந்தையே உணவாகக் கொண்டு நோய்களின் இருப்பிடமாக மாறி வருவதையல்லவா கண்டு கொண்டிருக்கிறோம்.

**2. உடை** : மேலே ஒரு முண்டு, கீழே ஒரு துண்டு என ஆண்களும் அழகை விளம்பரப் படுத்தாத புடவை – மார்புக்கச்சை, அணிகலன்கள் என அணிந்து அடக்கமே உருவாக பெண்களும் வாழ்ந்திருந்த நிலை மாறி அழகை அள்ளி தெளித்திடவே உருவாக்கப் பட்ட வித விதமான வண்ண – வடிவமைப்புகள் (Designs) கொண்ட ஆடைகள் எங்கு காணினும் நீக்கமற நிறைந்து கிடக்கிறதல்லவா? எத்தகு மாற்றம் இது? ஆண்டுக்கு ஆண்டு வண்ணங்களும் வடிவங்களும் மாறிக் கொண்டே இருக்கின்றன !

**3. உறையுள் :** குச்சில் – குடில் – மச்சு வீடு – மாடிவீடு என்ற நிலையிலிருந்து அடுக்குமாடி – ஐந்து மாடி – அம்பது – நூறு மாடி என மேலும் உயர்ந்து கொண்டே போகிறது. கட்டிடக்கலையில் பெருமைப்படத்தக்க பிரம்மாண்டமான ஏற்றங்களை கண்டு கொண்டே இருக்கிறோம்.

இம்மண்வெளிப் பயணத்தில் தான் எத்தனை மாற்றங்கள்! மாட்டு வண்டி – குதிரை வண்டி – மனிதனே இழுத்த ரிக்ஷா வண்டி என்பதெல்லாம் கடந்து இன்று, வேகத்தில் ஒன்றை ஒன்று முந்துகின்ற பாங்கில் வேக ஊர்த்திகள் – உல்லாச ஊர்திகள் எத்தனை! எத்தனை !!

விண்வெளிப் பயணத்தையும் விட்டு வைக்க வில்லையே! நெடுந்தூரக் கோள்கள் பற்றிய ஆய்விலும் சாதனைகள் பற்பல நிகழ்த்திவிட்டோமே!! மருத்துவக்கல்வியில் மகத்தான முன்னேற்றம்! உலகத்தையே உள்ளங்கையில் கொண்டு வந்து விட்ட கணினிகள் உபயோகிப்பதில் வல்லமை! உலகளாவிய வாணிபம் உட்கார்ந்த இடத்திலிருந்தே என மனிதன் நிகழ்த்திய – நிகழ்த்திக் கொண்டிருக்கிற மாற்றங்களை பட்டியல் இட்டுக்கொண்டே பெருமிதப்படலாம். இவையாவும் மனிதன் நிகழ்த்தியவை. **இனி மனிதனுள் நிகழ்ந்த மாற்றங்களையும் சற்று சிந்திப்போமா ?**

நூறு ஆண்டுகளுக்கு முன் அடிமைப்பட்டுக் கிடந்தான் – அயராது உழைத்தான் அன்னியனுக்காக ! ஏழையாய் – கோழையாய் உலாவினான். அஞ்சி அஞ்சிச்சாவார் – இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே என்ற பாரதியின் படப்பிடிப்புக்கு மிகப் பொருத்தமானவனாகவே வாழ்ந்தான்.

அறிவுச்செல்வமோ கொட்டிக்கிடந்தது. குவியல் குவியலாக – அனுபவிக்கத் தெரியாமல் அறியாமைச் சேற்றில் மூழ்கி அதுதான் விதி என அடங்கிக்கிடந்தான்.

அடிமைத்தளை அகன்றது. கல்விக்கண் திறந்தது. 'எண்ணும் எழுத்தும் கண்' என தகும் என உணர்ந்து ஓதியவர்கள் எண்ணிக்கை, பல்லாயிரமாக பற்பல கோடிகளாகப் பெருகின.

கற்றவர்கள் எண்ணிக்கை பெருகியதே தவிர, கற்றவைகளைப் பின்பற்றுபவர் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகின்றது.

மனித நேயம் பெருகியதா? வன்முறைகள் குறைகின்றதா? போர்க்குணம் தேய்கின்றதா ? இன் சொற்களும், கனிவான பார்வையும் எங்கோ ஒளிந்து கொண்டனவா? எரிச்சலும், சலிப்பும், கோபமும் தானே கொப்பளித்து வழிகின்றது.

**கெடு வல்யான் என்பதறிக தந்நெஞ்சம்**
**நடுவொரீஇ அல்ல செயின்நடு** – குறள் 116

நிலைமை அற்ற செயலை செய்யும் எண்ணம் வந்தாலே கெடுவேன் நான் என நெஞ்சம் அறிவிக்குமாம். பாவம் ! வள்ளுவர் – இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பு தெரிவித்த கருத்து. இன்றோ, அவ்விய நெஞ்சத்தான் தானே ஆக்கமும், அரசாளும் ஆற்றலும் பெற்றிருக்கிறான்.

உண்மை – வாய்மை – மெய்மை – நேர்மை இந்த வார்த்தைகளெல்லாம் சிலரால் இன்னும் எழுதப்பட்டும், மிகச்சிலரால் படிக்கப்பட்டும் வருகிறதே தவிர பயன்பாட்டில் காணோம்.

ஔவையாரின் ஒரு பாடல் :–

**மனித இலக்கணம் :**

**ஒன்றாகக்காண்பதே காட்சி புலனைந்தும் வென்றான்**
**தன் வீரமே வீரமாம் என்றாலும்**
**சாவாமல் கற்பதே கல்வி தனை**
**பிறர் ஏவாமல் உண்பதே ஊண்**

அனைவரிடத்திலும் நேசக்கரம் நீட்ட வல்ல, சமநோக்கு, ஐந்து புலன்களையும் தன் கட்டுப்பாட்டில் இயக்க வைத்திடும் வீரம், நற்பண்புகளையும், மனத்திண்மையும் செழிக்கவைத்திடும் கல்வி, இலவசத்தை ஏற்க மறுக்கும் உறுதி வழங்கும் உணர்வு, என வாழ்ந்திடுதல்

தான் மனிதனுக்கு ஔவையார் வகுத்திட்ட இலக்கணம். (Definition of a Human Being)

மனிதனிடத்தில் இந்த மாற்றங்கள் நிகழாதவரை வியக்க வைக்கும் எத்தகு முன்னேற்றம் ஏற்படினும் அவை ஏற்றங்களாக இராது. ஏமாற்றங்களாகவே இருக்கும். அழிவுப்பாதைக்கு அழைத்துச் சென்றிடும் ஆகவே, மனிதா! மாறிவிடு!! இது இயற்கை விதி (Law of Nature) யின் உத்தரவு. அடியேனின் விண்ணப்பம். நமது சந்ததிகள் நலமாக வாழ வேண்டாமா?



சென்னை பாரிமுனை வீராசாமி பிள்ளை தெருவில் வள்ளலார் வாழ்ந்த இல்லம்
காலம் : 1825 - 1855

# அணுகுமுறை

மனித சமுதாயத்தின் அடிப்படைத் தேவைகள் மூன்று : உணவு, உடை, உறையுள். ஓர் விரும்பத்தக்க சுவையான கற்பனை : ஒரு அரசு அனைத்து மக்கட்கும் அடிப்படைத் தேவை மூன்றினையும் (From Cradle to Grave) பிறப்பிலிருந்து இறுதிவரை உறுதியாக ஊழலின்றி அளித்து வருவதாக வைத்துக்கொள்வோம். அந்த சமுதாயத்தில் வன்முறை இல்லை, வெறுப்பில்லை, கொள்ளை இல்லை, கொலைகள் இல்லவே இல்லை என எதிர் பார்க்கலாமா ? மனித நேயம் மலருமா? ஆக்க சிந்தனை அதிகரிக்குமா? மாறாக சோம்பித்திரிந்து சோர்வால் மெலிவார்களா? கொஞ்ச நேரம் கண்களை மூடி தியான நிலையில் இந்தக்கற்பனையை பல கோணங்களில் அலசிப்பாருங்கள் ?

1. அத்தியாவசியத் தேவைகள் 2. அவசியத் தேவைகள் 3.ஆடம்பரத் தேவைகள் (Man is a Bundle of Thoughts) மனிதனின் ஆசைகட்கு அளவே கிடையாது. ஒன்று நிறைவேறினால் பிறிதொன்று முளைத்துக்கொண்டே இருக்கும்.

தேவைகள் பெருகப் பெருக மனித சக்தியின் இயக்கமும் மிகுதியாகும். இயக்க மிகுதியினால் ஆக்க பூர்வ செயற்பாடுகள் அதிகரிக்கும்.

இங்கே தான் சிக்கல் ஆரம்பிக்கிறது. ஆக்க பூர்வ சிந்தனை – செயல்களோடு நின்றால்தானே? அழிவுப்பாதைநோக்கியும் சிந்தனைகள் விரைகின்றன. சாதனைகள் பெருகுகின்றன. அணு விஞ்ஞானம்,எத்தனை ஆக்கப்பூர்வ செயல்களை வழிவகுத்ததோ அதற்கும் சற்று கூடுதலாக அணுகுண்டு செய்யவும் வித்திட்டு, வளமாக விஷ விருக்ஷமாக அல்லவா மாறி நிற்கிறது. அணுகுண்டு வெடிக்கும் நாடுதான் வல்லரசு பட்டியலில் இடம்பெறுகிறது என்று பெருமிதம் பேசும் அழிவுப்பாதையில் அல்லவா செல்ல வைத்துவிட்டது.

இணை கோடுகள் போன்று ஆசை, பேராசை, போட்டி, பொறாமை, வெறுப்பு, விரோதம், வன்முறை, போராட்டம் என விரைவாகப்பரவி மனிதகுலத்தை அச்சுறுத்தும், தீர்க்க இயலாப் பிரச்சனைகளாக சமுதாயத்தை நிம்மதி இழக்கச் செய்கின்றதே !

இதற்குத் தீர்வுதான் என்ன? பிரச்சனைகள் இல்லாத சமுதாயம் இயக்கமற்றதாக இருக்கும். உண்மைதான். ஆகவே பிரச்சனைகள் வேண்டும். ஆனால் எந்த பிரச்சனையையும் எளிதில் சுமுகமாக தீர்த்து விட முழு முனைப்புடன் செயல்படும் நேர்மையான மனிதநேயம் கொண்ட

அமைப்புகள் உருவாக வேண்டும். அப்படிப்பட்ட அமைப்புகள் உருவாகுமா? உருவாக்க இயலும்! தொடர்ந்து படியுங்கள்.

பொழுது புலர்ந்தது, பிறிதோர் நாளின் நல்ல துவக்கம்.

மனிதர்கள் தங்கள் அன்றாட அலுவல்களான சந்திப்புகள் உரையாடல்கள் செயற்பாடுகள் ஆகிய இவற்றை சுறுசுறுப்புடனும், இன்முகத்துடனும், சலிப்போடும், சிரத்தையின்றியும், பயத்தோடும், பணிவோடும், கம்பீரமாகவும், கனிவாகவும், காருண்யத்துடனும், கர்வத்தோடும் தொடருகின்றனர்.

நமது அன்றாட அலுவல்கள் மேலே குறிப்பிடப்பட்ட மூன்று பெரும் பகுதிக்குள் அடங்கும் என்பது நிதானமாக சிந்தித்துப் பார்ப்பின் விளங்கும்.

நாம் பெற்றோரை சந்திக்கிறோம், பெற்றவர்களை சந்திக்கிறோம், கற்றோரை சந்திக்கிறோம், கல்வி அளித்தோரை, அளிப்பவரை சந்திக்கிறோம், மேலாளரை சந்திக்கிறோம், பணியாளரையும் சந்திக்கிறோம், சேவைகள் அளிப்போரை சந்திக்கிறோம், நமது தேவைகளைத் தீர்ப்போரையும் சந்திக்கிறோம். நோயாளிகளைச் சந்திக்கிறோம், நோய்தீர்க்கும் மருத்துவர்களையும் சந்திக்கிறோம். பக்தியோடு சென்று பரமனை சந்திக்கிறோம்.

இந்த சந்திப்புகள் நாம் எதிர்பார்க்கிற திருப்தியையும் மன நிறைவையும் தருகின்றனவா ?

சந்திப்புகளைத் தொடர்ந்து உரையாடல்கள்; பின்னர் செயற்பாடுகள் இவை அனைத்தும் நமக்கு வெற்றியை மகிழ்ச்சியைத் தருவதையே நாம் அனைவரும் விரும்புகிறோம். ஆவலோடு எதிர்பார்க்கிறோம். ஆனால் எதிர்பார்த்த அளவு நிறைவேறவில்லை என்போரும், ஏமாற்றம் தான் இந்த முறையும் என்போரும், புதிய பிரச்சனைகள் முளைத்துவிட்டன என்போரும் தான் அதிகம். சிலர் மட்டுமே மகிழ்ச்சியாகவும், மனநிறை வோடும் இருப்பார்கள் – இருக்கிறார்கள்.

இந்த சிலர், பலராவது எப்படி? அப்படி ஒரு சமுதாயத்தை உருவாக்குவது தான் நாகரிக மனிதனின் (Arilizedman) கடமை.

இயலுமானால் இத்தனை காலம் மனிதன் செயல்படுத்தி இருப்பானே? இயலும், ஆனால் மனிதன் செயல்படுத்தவில்லை என்பதுதான் நிதர்சனமான Agmark உண்மை. ஓர் ஆங்கில அறிஞர் நமது அணுகுமுறை தான் நமது எதிர்பார்ப்புகளை முழுமையாக வழங்கவும், முற்றிலுமாக ஏமாற்றவும் செய்யும்.

அணுகு முறைக்கான எளிய சூத்திரம் மிகமிக எளிதாக நாம் நினைவில் கொள்ளவும், பயன் படுத்தக் கூடியதுமான Easy Formula **ஒரு கூட்டல், ஒரு பெருக்கல், ஒரு கழித்தல்.**

**கனிவைக் கூட்டுங்கள், பணிவைப் பெருக்குங்கள், சினத்தைக் கழியுங்கள்** (தவிர்த்துவிடுதல்) கனிவு : அன்பான முக மலர்ச்சியோடு இன்னுரை. பணிவு : அமைதி – அடக்கம் (அடிமைத்தனம் அல்ல). சினம் : கோபம் – அறவே அகற்றப்படல் வேண்டும். (இது தேவையே இல்லாத ஓர் கழிவுப்பொருள்) சினத்தைத் தவிர்த்திட்டு என்னிடம் வாருங்கள். உங்களுக்கு மரணமிலாப் பெருவாழ்வு பற்றி சொல்கிறேன் என்று வள்ளலார் சொன்னதை நினைவில் கொள்க.

உங்கள் சந்திப்பில், உரையாடலில், செயற்பாட்டில் கனிவைக் கூட்டி – பணிவைப்பெருக்கி – சினத்தைத் தவிர்த்து (கழித்து) ஒரு வாரம் முயற்சி செய்து பாருங்கள். உங்கள் மனநிறைவு மகத்தானதாக இருக்கும்.

அடிப்படைத் தேவைகள் மூன்றல்ல! இம்மூன்றிற்கும் முன்னதாக – மூத்ததாக நமக்குத் தேவையானது நேர்மை நிறைந்த மனிதநேயம்!



1. மறைமலை அடிகள் நூலகத்தின் வெளித்தோற்றம் 2. நூலகத்தின் இன்னொரு தோற்றம்
3. நூலக ஜன்னலிலிருந்து பார்த்தால் மல்லிகேஸ்வரர் ஆலய கோபுரம்.
குறிப்பு : சோமு செட்டியார் இல்லத்தில் வள்ளலார் சத்சங்கம் நிகழ்த்திய இடம்.

# வினைகள், விளைவுகள்

**"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"**
**என்ன செய்யின் – என்ன விளையும்?**
**"தினை விதைத்தவன் தினை அறுப்பான்;**
**வினை விதைத்தவன் வினை அறுப்பான்"**

இந்த இரண்டு பழமொழிகளும் கால காலமாக நம்மவரால் பேசப்படும் வரும் சாதாரண, மிகச் சாதாரண சொற்றொடர்கள். இவற்றை அறிந்தோரும், அவ்வப்போது பயன்படுத்துவோரும் அநேகர்.

ஆனால் இவற்றின் உட்பொருளை உணர்ந்தவர்கள் மிக மிகக் குறைவானவர்கள் தான் என்பது நிதர்சனம். எப்படி இந்த முடிவிற்கு வந்து விட்டீர்கள் என்றுதானே கேட்கிறீர்கள்? நாட்டில் குற்றங்கள் குறையவே இல்லையே! குற்றங்கள், பல்வேறு அவதாரங்களையல்லவா எடுத்துக்கொண்டே இருக்கிறது!

**"கெடுவல் யான் என்பதறிக தந்நெஞ்சம்**
**நடுவொரீஇ அல்ல செயின்"** – குறள் 116

வள்ளுவரின் இந்த அறிவுறுத்தல், ஐந்தாம் வகுப்பு மாணவன் படித்து, பதவுரை, பொழிப்புரை மனப்பாடம் செய்ய மட்டுந்தானா?

பெரு வணிகர்கட்கும், பெரும் பொறுப்பிலிருப்பவர்கட்கும், அரசியல்வாதிகட்கும், அரசாங்க அதிகாரிகட்கும், இதன் பொருள் விளங்கவில்லையா? அல்லது இது ஒரு தேவையற்ற அறிவுரையா?

அண்மைக்காலத்தே அரங்கேறிய தீவினைகள் – ஒரு சிறு பட்டியல், அனைத்தும் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்டவைதான். சமுதாயத்திற்கு பெருங்கேடு சூழக்கூடிய தீயச்செயல்களை மட்டுமே தேர்ந்தெடுத்து பட்டியலிட்டேன்.

1. போலி மருந்துகள் புழக்கம்
2. சுத்திகரிக்கப்படாத சாயப்பட்டறைக் கழிவுகள்
3 . ரசாயன ஆலைக் கழிவுகள்
4. மருத்துவமனைக் கழிவுகள்
3. Granite ஊழல்
4. மணல் கொள்ளை
5. திட்ட ஒதுக்கீடுகளில் சுரண்டல்

இவையனைத்தும் சமுதாயத்திற்கு செய்யப்படும் தீய வினைகள் தானே? இவ்வினைகளின் விளைவுகளும் கொடிதினும் கொடியவைகளல்லவா? மாற்றுக்கருத்து ஏதேனும் உண்டா?

**"எனைப்பகை உற்றாரும் உய்வர் வீயாது**
**பின் சென்று அடும்"** – குறள் 207

தீவினைப்பகை மட்டும் நிழல் போல் தொடர்ந்து சென்று அழிக்கும் வல்லமை பெற்றது என்கிறார் வள்ளுவர். இது இவர்கள் அறியாததா? அறியாமையா? அலட்சியமா?

இத்தகு தீவினைகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருப்பவர்கள் அழிவதிலும் நமக்கு உடன்பாடில்லை. இவ்வினைகளை அரங்கேற்றுவோர் சிறு குழுவினர்தான். ஆனால் இவற்றால் பாதிக்கப்படும் அப்பாவிகள் ஆயிரக்கணக்கில் – ஏன் இலட்சக்கணக்கில்.

இவர்கள் எப்போது திருந்துவர்? எப்படி திருந்துவர்? சென்ற "தீப நெறி" இதழில் தீபத்தின் இலக்கு பற்றி சிந்தித்தோம்.

**குற்றமில்லா பாரதம்...**
**பட்டினியில்லா பாரதம்...**
**நோயில்லா பாரதம்...**

குற்றமில்லா பாரதம் உருவாக்குவது தான் நமது முழு முதல் கடமையாக இருக்க வேண்டும். ஏனெனில் குற்றங்களை சமரசம் ( compromise) செய்து கொள்ளும் கையற்ற நிலைக்கு ( There is no other go) நாம் பக்குவப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

"சமுதாயம் – குற்றங்களின் விளை நிலமாக மாறி வருகிறது – உண்மைதான். ஆனால் நாம் என்ன செய்ய இயலும். எங்கும் ஊழல், எதிலும் ஊழல்" எனக்கூறிக்கொண்டு வேடிக்கை பார்க்கும் – விமர்சிக்கும் மனிதர்களாகவே மாறி வருகிறோம்.

வாசகர்களே ! உங்களைத் தாழ்ந்து, பணிந்து விண்ணப்பிக்கிறேன். "விரும்பத்தகாத கலாச்சார சீர்கேட்டையா நமது சந்ததியினருக்கு விட்டுச் செல்லப்போகிறோம்?"

குற்றங்கள் குறைய அல்லது மறைய என்ன தான் வழி? குற்றமிழைப்போரை கடுமையாகத் தண்டித்துவிட்டால், தாமதிக்காமல் தண்டித்துவிட்டால், குற்றங்கள் குறைந்திடுமா?

அவலங்களை விரிவாகப்படம் பிடித்துக்காட்டி விடுவதனால்

குற்றங்கள் குறைந்திடுமா?

புதிது புதிதாக சட்டங்கள் இயற்றி அமுல்படுத்திவிட்டால் குற்றங்கள் குறைந்திடுமா? ஏற்றத்தாழ்வுகள் அகன்றிட இலவசங்கள் வழங்குவதாலோ, பகிர்தல் முறையினை மேல் படுத்துவதாலோ நிறைவேற்றிட இயலாது.

பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் பற்றி மட்டுமே பேசி பேசி, எழுதி எழுதி தீர்த்துவிட்டோம். ஆனால் எண்ணுந்திறனில் செயல்திறனில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகள் பற்றி பெரிதாகப் பேசுவதுமில்லை. அதைச்சரி செய்யத் தேவையான முயற்சிகளை மேற்கொள்வதுமில்லை.

சாதனையாளர்கள் மிகக்குறைவாகவும், சாமானியர்கள் மிகமிக அதிகமாக இருப்பது, நூற்றாண்டுகளாகத் தொடர்வது ஏன்?

இலக்கியம் படைத்தவர்கள் – படைக்கிறவர்கள் – சில நூறு பேர். இலக்கியம் படிப்பவர்கள் – சில ஆயிரம் பேர். இலக்கியமா? எனக் கேட்பவர்கள் பல இலட்சம் இருப்பதும் தொடர்கிறதே ஏன்?

இசைபட வாழ்வோர் குறைவாகவும், வசைபாடி, வம்பளந்து கொண்டே இருப்போர் ஏராளமாகவும் இருப்பது ஏன்?

**போராட்டங்கள், இதுவரை ஒரு வெற்றியும் பெற்றதில்லை, Unproductive நேரம் – நிதி விரயமாகிறதே தவிர வேறெந்தப் பயனுமில்லை. அன்னதானங்கள் பட்டினியை முற்றிலும் அகற்றிடுமா?**

விழிப்புணர்வு முகாம்கள் – பெரிய, பெரிய மருத்துவமனைகள் நோய்களை முற்றிலும் அகற்றுவதில் வெற்றிகண்டுள்ளனவா? குற்றங்கள் குறைய அல்லது மறைய என்னதான் வழி ? ஒரே வழி:– இந்த நாட்டு அறிவாளரும், பேச்சாளர்களும், எழுத்தாளர்களும், ஆசிரியர்களும், கவிஞர்களும், படைப்பாளிகளும், பெருஞ்செல்வந்தர்களும், பெருவணிகர்களும், அரசியல்வாதிகளும், அரசாங்க அதிகாரிகளும்,

**ஒரு சில ஆண்டுகளுக்கே ஆயினும்**
**எண்ணத்தில் தூய்மையையும்**
**சொல்லில் வாய்மையையும்**
**செயற்பாட்டில் நேர்மையையும்**

உறுதியாகக் கடைப்பிடித்து, நடுநிலை பிறழாமல் செயலாற்றுவார்களாயின், குற்றங்கள் மறையும் அல்லது குறையும்.

பட்டினியில்லா பாரதம் மலரும். நோயில்லா பாரதம் நனவாகும், எண்ணுந்திறனில் ஏற்றதாழ்வு இருக்கும் வரையில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை முற்றிலும் களைந்திட இயலாது.

**"பெரியோர் எனின் வியத்தலும் இலமே**
**சிறியோர்எனின் இகழ்தல் அதனினும் இலமே"**

எனும் மனப்பாங்கு அடிவருடிகளின் இதயத்தில் இடையறாது ஒலிக்க வேண்டும். தன்னம்பிக்கை, தளரா முயற்சி தாரக மந்திரமாதல் வேண்டும். தொண்டர்களிடத்தில் தூய்மை வேண்டியதுதான். ஆனால் அதைவிட அவசரமான, அவசியம் தலைவர்களிடத்தில் நேர்மை, நடுநிலை பிறழாமை, **அரைநிர்வாண காந்தி, அன்னை தெரஸா, வள்ளலார்** இவர்களை முன் உதாரணமாக வைத்து இவர்களைப்போல செயல்படல் வேண்டும். ஆனால் நாமோ துதி பாடுதலோடு நிறுத்திக்கொள்கிறோம்.

**நல்வினைகள் விதைப்போம்!**
**நற்பயன்கள் விளைவிப்போம்!!**
**அடுத்த சந்ததிகளுக்கு...**



வள்ளல் பெருமான் அருவமாக காட்சி தரும் சித்தி வளாகத்தின் அன்றைய தோற்றம்

**கற்பகம் என் உளங் கைதனில் கொடுத்தே**
**அற்புதம் இயற்றெனும் அருட்பெருஞ்ஜோதி**

# எத்தனை கோடி
# இன்பம் வைத்தாய் இறைவா!!

ஆண்டவனே? அருளாளா?!

பஞ்ச பூதங்களை படைத்தவனே! உனது படைப்புகளை பட்டியலிட தனித்திறமையல்லவா வேண்டும்.

எத்தனை ஜீவராசிகள் – எத்தனை வித தாவரங்கள் – கம்பீரமான மலைகள் அவை மீது தவழ்ந்து, கவிழ்ந்து ஊர்ந்து செல்லும் மேகக்கூட்டம். வித விதமான ஓவியங்களாக அவை மாறுகின்ற அற்புதக் காட்சி.

வண்ண வண்ண மலர்கள். பற்பல சுவைகளில், வடிவங்களில், காய்கள் – கனிகள் ஆமாம். இவ்வளவையும் படைத்த பிறகு தான் மனிதனை படைத்தீரா? ஏன்? ஒரு முறை அமைதியாக என்னையே நான் முழுமையாகப் பார்த்துக் கொண்டேன். உச்சிமுதல் உள்ளங்கால் வரை நிதானமாக தீர்க்கமாகப் பார்த்தேன்.

ஒரு மனிதக் கருவியால் எப்படியெல்லாம் இயங்க முடிகிறது. என்ன வெல்லாம் சாதிக்க முடிகிறது. கண்டு மகிழ – ஒலிகளையெல்லாம் கேட்டு இன்புற, உண்டு நலம் பெற, நன்மொழிகளை நவின்று மகிழ்விக்க, நுகர – முகர – தீண்டி சுகம் பெற்றிட, என இவ்வளவு செயற்பாடுகட்டும் ஐம்புலன்களை அளித்துள்ளீர்.

**"உடம்புன்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்பினைக் கடந்து ஓம்புகின்றேனே"**

என்றார் திருமுலர். அந்த உறுபொருள் யாது? ஆறாவது அறிவா? எண்ணுந்திறனா? இத்தனை படைப்புகளின் பயன்பாட்டினை புரிந்து கொள்ளவும், இவைகளின் பயன்பாட்டினை பன்மடங்காகப் பெருகிடச் செய்யவும் தானே, மனிதனுக்கு எண்ணுந்திறனை கூடுதலாக கொடுத்துள்ளீர்கள்.

Instinct - Intellect - Intuition வெறும் உணர்வுகளால் மட்டும் உந்தப்பட்டு, வாழ்நாட்களை வீணடித்துக் கொண்டிருப்பவன் சாமான்யன். அறிவுத்திறனாலும், ஆய்வுத்திறனாலும் நன்மைகளை மட்டுமே விளைவிக்கும் நன்னெறிகளை வகுத்து அவைகளின் வழி காட்டுதலில், வாழ முயற்சி மேற்கொண்டுள்ளவன், இன்றைய சராசரி மனிதன்.

இவனை மாமனிதனாக உயர்த்துவதுதானே உயர் நலத் தோனாகிய உனது நோக்கம்!

மாமனிதனாக மாறிட – உயர்ந்திட நம்மில் சிலர் – வெகுசிலர் முயல்கிறார்கள். உண்மை தான். பற்பலர் திணறுகின்றனர். இதுவும் மறக்க இயலாத உண்மை. மனிதன் எதுவாக விரும்புகிறானே. அவன் விருப்பங்களை அப்படியே நிறை வேற்றத்தானே நீ விரும்புகிறாய். நிறைவேற்றிக் கொண்டும் இருக்கிறாய்.

இயற்கையின் இயல்பே (Law of Nature) அதுதான் என, வேதம், உபநிஷத்துக்கள், பைபிள், குரான், பகவத்கீதை மற்றும் மாமனிதர்கள் அளித்துச்சென்ற அத்தனை நூல்களும் ஒருங்கே உரைக்கின்றன. மாற்றுக்கருத்தே எங்கும் காணப்படவில்லை.

பரிபூரணனே! அடியேன் விண்ணப்பத்தை ஏற்றருளும். அனைத்து அவயங்களும் அருமையாக இயங்கிக்கொண்டிருந்தும், ஏராளமானவர்கள் சராசரி மனிதனாகக் கூட வாழ இயலாமல் நடுநிலை பிறழா நன்னெறியை கொஞ்சம் கொஞ்சமாக மறந்து வருகின்றனர்.

சிலர் சற்றுத்துணிச்சலாக, Integrity –ஐ துறந்து தூக்கி எறிந்தே விட்டார்கள். அந்தப் பொருள் நமக்கு வேண்டாம். நீதிமன்றங்கள் தான் அதைக் காப்பாற்ற முயன்று கொண்டிருக்கின்றன. முழு மனிதனே அரை குறையாக வாழ்கிற போது, நீங்கள் அரை குறை மனிதர்களையும் படைத்து ஏன் எங்களை மேலும் அவதிக்குள்ளாக்குகிறீர்கள்.

பார்வை இல்லாதோர், காது கேளாதோர், வாய் பேச இயலாதோர், அங்க ஊனமுற்றோர், மன ஊனமுற்றோர், இருபாலரிலும் சேர இயலாத ஒரு சாரார், மனிதனை மாமனிதனாக்க எண்ணும் நீர் இப்படிப்பட்டவர்களையும் படைத்திடுதல் நியாய மாகுமா? அவரவர் “ஊழ்வினை” என்ற ஒரே வார்த்தையில் பதில் சொல்லித் தப்பிக்காதீர்.

மனிதனுக்கு அளிக்கப்பட்ட அறிவுரைகள் அளவற்றவை. வேத காலத்திலிருந்து இன்று வரை, எண்ணற்ற பக்தி இலக்கியங்கள் தவ சிரேஷ்டர்களால் தெய்வவாக்காகத் தரப்பட்டும், மனிதன் மாமனிதனாக உயரவே இல்லை. மாறாக, தரம் தாழ்ந்தவனாக அழிவுப்பாதையில் ஆர்வமோடு தொடர்கிறான்.

ஆகவே, உன்னிடம் நான் இறைஞ்சுகிறேன். விண்ணப்பிக்கின்றேன். நீ கருணைக்கடல் என்பதால், பரமாத்வாவே! ஒன்றை மட்டும் கொடு. ஒன்றே ஒன்று! மனிதன் மனத்தில் நற்சிந்தனை – தூய்மை தவிர வேறொன்றும் புக முடியாமல் செய்து விடு சீராளா! வேறொன்றும் வேண்டிலேன்! வேண்டுதல், வேண்டாமை இல்லாதவனே!

அன்றே நீ மகாபாரதப்போரை தவிர்த்திருக்கலாம். துரியோதனன் மனதில் தூய்மையையும் – வாய்மையையும், நேர்மையையும் செழிக்க வைத்திருந்தால், அத்தனை அஸ்திரங்கள் தேவையில்லை. பதினெட்டு அக்குரோணி அப்பாவிகள் மாண்டிருக்க வேண்டியதில்லை.

அன்று தொடர்ந்து இன்று வரை, வன்மம் – வஞ்சகம் – சூழ்ச்சி, போர் – அழுகை – அபயக்குரல் எதுவுமே நின்றபாடில்லை. குறைந்த பாடில்லை. இமயமலையில் புனித யாத்திரை சென்ற பல்லாயிரக்கணக்கானவரை வெள்ளத்தில் சங்கமிக்க வைத்து விட்டாயே? என்ன கொடுமை. எப்படித் துடித்து இறந்திருப்பர். இறைவா உனக்கு இரக்கமே இல்லையா? மனிதன் மாற மறுக்கிறானே – என் செய்வது. நீ மாற்றிவிடு – மகாத்மாவே! பேராற்றலே!! நல்ல எண்ணங்களை மட்டுமே எங்கள் உள்ளத்தில் விதைத்துவிடு. பிறகு பார்!

இந்தப் பாரெல்லாம் பலகோடி இன்பம் மலரும் இடமாக மாறிடும். அன்பு – நேசம் – பாசம் – பரிவு – பணிவு – இணக்கம் – இன்சொல் – இனிமை – இனிமை – இனிமை மட்டுமே! மரணமிலாப் பெருவாழ்வு வாழ்வர் மானுடர்.




தண்ணீரால் விளக்கு எரிந்த இல்லம் – கருங்குழி

**அருள் ஒளி என் தனி அறிவினில் விரித்தே**
**அருள் நெறி விளக்கெனும் அருட்பெருஞ்ஜோதி**

# இறைவனின் திருமாளிகை

**நமது வழிபாடு, தொழுகை, பிரார்த்தனைகள் இவையாவும் இறைவன் திருமாளிகைக்கு வழிகாட்டுமாம்.**

நாம் அவ்வப்போது செய்திடும் தான தருமங்கள். நமக்குப் போக எஞ்சியிருக்கும் சில்லறைகளை தள்ளி வருகிறோமே. அது இறைவனின் திருமாளிகைக்கு வாயில் வரை அழைத்து செல்லுமாம்.

ஆதரவற்ற ஒருவர்க்கோ, ஒரு சிலருக்கோ எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்யப்படும் உதவிகளை நமது அன்றாடக் கடமையென மேற்கொண்டு செயல்படுவோனை, இறைவன் திருமாளிகைக்கு உள்ளேயே அது அழைத்து செல்லுமாம். பிரார்த்தனைகள் – வழிபாடு – தொழுகை – தியானம் – துதிப்பாடல்கள் பாடுவது – மந்திர உச்சாடனம் இவையெல்லாம் தேவை – அவசியம் தேவை – இவை நமது மன மாசுகளை அகற்றி தூய்மையான எண்ணங்கள் தோன்றிட உதவும்.

ஏதோ கொஞ்சம் – அவ்வப்போது தருவது. தனக்கு மிஞ்சி தருமம் – அதாவது தன் இச்சைகள் அத்தனையும் நிறைவேற்றிக்கொண்டு, எஞ்சியிருந்தால், இருக்கும் சில்லரைகளை தானமாகத் தருவதுதான் இன்றைய நிலை. அவசரப்படாமல் ஆழமாக சிந்தித்தால் இந்த யதார்த்த நிலை விளங்கும். தவறாக எண்ணாமல் இந்தக் கருத்து ஏற்கப்படும். இது இறைவன் திருமாளிகையின் வாயில் வரைதானே கொண்டு செல்லும்! அது போதுமா?

முதற்கண், இறைவனின் திருமாளிகை பற்றி தெரிந்து கொண்டால் தானே, அந்த மாளிகைக்கு வழி அறிந்து கொள்ளவோ – வாயிற்படி வரை செல்லவோ, மாளிகையின் உள்ளேயே செல்லவோ, ஆர்வம் ஏற்படும். அந்த திருமாளிகை திருசிற்றம்பலமா, வைகுண்டமா, திருக்கைலாயமா,பரலோகமா, பாற்கடலா, Heaven என்று சொல்லப்படுகிற சுவர்க்க லோகமா?

இறைவன் வசிக்கின்ற திருமாளிகை எப்படிதான் இருக்கும். அங்கு செல்வதின் அத்தனை மாந்தரின் இதயத்துடிப்பாகவும் ஏக்கமாகவும் – அடையவேண்டிய ஒரே இலக்காகவும் ஆன்றோர்களால் பேசப்பட்டும் – பாடப்பட்டும் வந்துள்ளனவே! கண்டாரும் விண்டதில்லை – விண்டாரும் கண்டதில்லை என ஒரு வழக்கு மொழி உள்ளது. இதன் விளக்கம்? பல விமர்சனங்கள், பண்டிதர்கள் மட்டுமே புரிந்து கொள்ளத் தக்கதும், பாமரர்களும் புரிந்து கொண்டு பயன்பெற வேண்டும் எனும் பெரும் பொறுப்பு இல்லாமலே பல நூற்றாண்டுகள் கழிந்து விட்டன. இன்னமும்

இறைவன் திருமாளிகையின் உட்புறம் பற்றிய விவாதம் தொடர்ந்து கொண்டு தான் உள்ளது. நமது வள்ளலார், சித்திலோகத்திற் சென்று சேர்ந்தது இறைவன் திருமாளிகைக்குத் தானா?

காரைக்கால் அம்மையார், ராகவேந்திரர், ஆதிசங்கரர், இராமகிருஷ்ணர், ரமண மகரிஷி வீடு பேறு அடைந்ததாகப் பரவசப்படுகிறோமே அவர்களெல்லாம் சென்றடைந்தது இறைவன் திருமாளிகைக்குத்தானா? பண்டிதர்கள் – பக்தி இலக்கியங்களைப் பலகாலம் படித்துத் திளைத்தவர்கள், கேட்பவர் உள்ளங்களெல்லாம் உருகிட எத்தனையோ அருமையான விளக்கங்கள் தரலாம், பொருத்தப்படலாம்.

ஆனால் அதிகம் படிக்காத – படிக்கவே விரும்பாத – சிந்திக்கத் தெரிந்தும் சீர்தூக்கிப் பார்க்க விரும்பாத – நூற்றாண்டுகளாக நடத்திக் கொண்டிருக்கும் நிகழ்வுகளை – கொண்டாடிவரும் பண்டிகைகளை ஏன்? எதற்கு? என்று கேட்பது கூட பாவம் என எண்ணிக்கொண்டு, சடங்குகளை உறுதியாகப் பற்றிக் கொண்டு திணறித்திண்டாடிக்கொண்டு இருக்கும் எண்ணற்ற எளியோர் இறைவன் பற்றியும், இறைவன் திருமாளிகை பற்றியும் முழுமையான விளக்கம் பெற வேண்டாமா?

இறைகலை பற்றியும், இறைவன் பற்றியும் சித்தாந்த – வேதாந்த விளக்கங்கள். துவைதம் – அத்வைதம் – விசிஷ்டாத்வைதம் பிற மத கோட்பாடுகள் – அந்த இலக்கியங்கள் விவரிக்கின்ற இறைநிலைகள் இவையனைத்தும் நமது சமுதாயத்தின் எத்தனை பேரால் – பேசப்பட்டும் – கேட்கப்பட்டும் – உணரப்பட்டும் கடைப்பிடிக்கப்பட்டும் வருகின்றன. இறைநிலை உணர்ந்து, பரசவ நிலை எய்தி வீடு பேற்றை முழுமையாக அடைந்து வாழ்வோர் நம்மில் எத்தனை சதவிகிதம்? கொஞ்சம் யோசிக்க வைக்கும் கேள்வி?

அட்டாங்க யோகம் – அட்டமாசித்தி அறிந்தவர்கள் அனுபவித்த வல்லுனர்களும் நாம் தானே! வான சாஸ்திரம் – நம்முடைய ஆதிமுனிவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது தானே! மருத்துவ சாஸ்திர முன்னோடிகளல்லவா நாம். நமது சித்தர் பெருமக்கள் எழுதிச் சென்றவை. பாடிச் சென்றவை அத்தனை பொக்கிஷங்களுக்கும் சொந்தக்காரர்கள் தானே நாம்! கட்டிடக் கலையைக் விட்டு வைத்தோமோ? வானை முட்டும் கோபுரங்கள் – பிரம்மாண்டமான மதிற் சுவர்கள் கொண்ட ஆலயங்கள் எப்படிதான் இந்தக் கோட்டை கட்டப்பட்டிருக்கும் என வியக்க வைக்கும் கோட்டை கொத்தளங்கள், அரண்மனைகள், அணைகள், ஏரிகள் அமைத்திட்ட ஆசகாய சூரர்கள் அல்லவா நாம்! ஆனால்?

இவ்வளவும் நம்மிடத்திலிருந்து பிறந்தன, இன்றும் இருக்கின்றன என்ற அளவில் அறிந்தோர், உணர்ந்தோர் அந்தத்திறன்களைப் பெற்றோர் அதன் வழி வாழ்வோர், உயர்ந்தோர் எவ்வளவு பேர் என எண்ணும் போது தான் அதிர்ச்சியும், ஆயாசமும் ஏற்படுகிறது. இலவசத்தை ஏற்கதான் ஓடிக்கொண்டிருக்கிறோம் எனக்காணும் போது தான் வாடிய பயிரை கண்டு உள்ளம் வெதும்பிய வாடிய வள்ளலார் போல துவண்டு போகிறோம். அன்னதானமே தேவையற்றது என்று தொனிக்கிறதே என்று சினங் கொள்ளாதீர்கள். நமது இன்றையத் தேவை, நமது சமுதாயத்தின் அடித்தட்டு மக்களின் அதாவது பெரும்பான்மையோரின் **அறியாமை அகல வேண்டுவது தான் அவசரத் தேவை.**

**செவிக்குணவு இல்லாத போது சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப் படும்** – குறள் 412

செவிக்குணவு சரியான முறையில் சரியான கருத்துக்கள் – விளக்கங்கள் – சரியான நடைமுறைகள் பெருவாரியான மக்கட்கு சென்று சேர வேண்டும் – சேர்க்கப்படவேண்டும். பற்பல கற்றோம் – அதன் வழி நின்றோமா – நிற்கிறோமா? கற்பித்தோம் – அதன் வழி நிற்க வைத்தோமோ! இங்கே தான் நாம் தவறு இழைத்துக் கொண்டு இருக்கின்றோம். அறியாமை பாற்பட்ட செயல்களை அடையாளம் காண்கிறோம். அறவே அகற்றுங்கள் என அறிவிக்கிறோம். அதோடு முடிந்தது நமது கடமையெனும் திருப்தியோடு சக்தியிலேயே உழன்று கொண்டிருக்கிறோம். இறைவன் திருமாளிகை பற்றி எளிமையாக எளியவர்களுக்கும் புரிந்து கொள்ளத்தக்க வகையில் ஏற்றுக்கொண்டு நடக்கத்தக்க வகையில் ஒரு கதை என் நினைவுக்கு வருகிறது.

இறைவன் வசிக்கின்ற இடம் என நாம் தேர்ந்து வைத்துள்ள புனித ஸ்தலங்களில் சிலவற்றை நினைவு கூறுங்கள். காசி, இராமேஸ்வரம் – ஹரித்துவார் – ரிஷிகேஷ் – பத்ரிநாத் – திருமலை – பழனி – சபரிமலை – திருவண்ணாமலை – சிதம்பரம் – திருத்தணி என பக்தியில் மூழ்கிட பிரார்த்தனைகள் செய்திட, வேண்டுதல்கள் நிறைவேற்றிட, நிறைய ஸ்தலங்களும் ஆலயங்களும் உள்ளன. அங்கு ஆயிரக்கணக்கில் – இலட்சக்கணக்கில் நாம் சென்று மீள்வதும் வாடிக்கையாகிவிட்டது.

இங்கெல்லாம் இறைவன் வசிக்கிறார் எனில், ஆம். அங்கெல்லாம் நிரந்தரமாக இருந்து அருள் பாவிக்க வேண்டும் என்று தான் ஆண்டவர் விரும்பினாராம். ஒவ்வொரு ஸ்தலத்திலும் ஆலயத்திலும் அமர்ந்து அங்கே வரும் பக்தர்களின் விண்ணப்பங்களைக் கேட்டு கேட்டு மிகவும் நொந்து போய் விட்டார். ஒவ்வொரு இடமாக மாற்றி – மாற்றி

அமர்ந்து பார்த்தாராம்.

எவ்வளவு தாராளமாக, ஏராளமாக, நல்ல எண்ணங்களை அனைவரும் ஆனந்தமாக வாழ்ந்திடும் வழிவகைகளை வகுத்து வைத்துள்ளேன். அவைகள் அனைத்தையும் விடுத்து தான் மட்டும் வாழ அதுவும், மேலும் துயரமும் துன்பமும் தொடர்ந்திடச் செய்யும் சின்ன சின்ன சிற்றின்ப கோரிக்கைகளையே விண்ணப்பமாக, வேண்டுதலாக வைத்தார்களாம் பக்தர்கள்.

எத்தனை இடங்கள் மாற்றினாலும் துரத்தி துரத்தி வந்து கேட்டதையே மீண்டும் மீண்டும் பிரார்த்தித்தார்களாம். சலித்துபோன இறைவன் விண்ணப்பங்கள் வைக்காத, பக்தர்களே இல்லையா என ஏங்கி, பக்தர்களால் தேட இயலாத ஒர் இடத்தை சேர்ந்து அங்கேயே நிரந்தரமாக தங்கி விட முடிவு எடுத்தாராம். பக்தன் தேடாத இடம், தேட இயலாத இடம் ஒன்று கண்டு பிடித்தார். அங்கேதான் அவர் நிரந்தரமாக தங்கிவிட்டார். அங்கே மட்டும் பக்தன் அவரைத்தேட முயற்சி எடுப்பதே இல்லை. **பக்தன் தேட முயற்சிக்காத அந்த இடம் எது? இறைவனின் திருமாளிகை எது?**

**பக்தனின் இதயம்!!**



சத்திய தருமசாலையின் இன்றைய தோற்றம்

**எச்சோதனை களும் இயற்றாது எனக்கே**
**அச்சோ என்றருள் அருட்பெருஞ்ஜோதி**

# மூன்று விண்ணப்பங்கள்
## பிறர் நலம் வேண்டிடும் பிரார்த்தனைகள்

**"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால்**
**தம் பிள்ளை தானே வளரும்"**

அவ்வப்போது நல்லோர் சிலரால் மட்டுமே சொல்லப்பட்டு வரும் ஒரு பழமொழி. "தீபம்" ஆற்றிடும் அரும் பணிகளில் முதன்மையானது 'பசிப்பிணி' தீர்த்தல். இந்த முதுமொழி பகிர்ந்து உண்பது பற்றி மட்டுமே வலியுறுத்துவதற்காக சொல்லப்பட்டதல்ல.

ஒட்டு மொத்த மனித நேயம் – பிறர் நலம் பேணும் பேராண்மை, பிறதின் நோய் தீர்ப்பதில் கிடைத்திடும் பேரானந்தம் பற்றி பறை சாற்றிட சொல்லப்பட்டதாகத்தான் எனக்குத்தெரிகிறது. அன்றாடம் நம் வீட்டில் பிரார்த்திக்கிறோம். ஆலயங்கள் சென்று வழிபாடு செய்கிறோம். நம்மில் பெரும்பான்மையோரின் வேண்டுதல்கள் – பிரார்த்தனைகள் எத்தகையது, எது பற்றியது என எண்ணிப்பாருங்கள்.

தன் நலம் – தன் சிறப்பு – தன் பிரச்சனை – தன் குடும்பச் செழிப்பு – தன் மக்கள் முன்னேற்றம் – இவை பற்றியே தான் இருக்கும். முதியோரில் சிலர் தன் பேரப்பிள்ளைகள், தன் அண்ணன் – தம்பி – அக்கா – தங்கை குடும்பத்தினரின் குறைகள் மறைய வேண்டும் – பிடித்துள்ள நோய்கள் நீங்க வேண்டும், செல்வத்தில் செழிக்க வேண்டும் என்றெல்லாம் பிரார்த்திப்பார். உண்மைதானே! இதற்கு அப்பால் நாம் நகர்ந்ததுண்டா?

நமக்கு அறிமுகமே இல்லாதோர் – ஓரளவுக்கு அறிமுகமானோர், அண்டை வீட்டுக்காரர், நமது வீதியில் வசிப்பவர் என்று எத்தனை, எத்தனையோ பேர் அனுபவிக்கும் இன்னல்கள் இடர்ப்பாடுகள் பற்றி கேள்விப்படுகிறோம். பத்திரிக்கைகளில் படிக்கிறோம். மின்னல்போல ஒரு பரிதாப உணர்வு தோன்றி மறைந்திடும். அல்லது "இதற்கெல்லாம் நாம் என்ன செய்ய முடியும்" என்று சமாதானப்படுத்திக் கொண்டு லேசாக வெளிப்படுகிற மனித நேய உணர்வினை, தொடர்ந்து உறங்கிடச் செய்கிறோம்.

"சர்வ ஜன சுகினோ பவந்து" அனைத்து மாந்தரும் நலமாக இருக்க வேணும் என்று நாமும் தான் விரும்புகிறோம். ஆனால், மனதார – உருக்கமாக பிரார்த்திக்கிறோமா? இல்லை! நமது பிரார்த்தனையால் நிறைவேறிடுமா என்ற உடனடி சந்தேகம், நம்மை பின்னுக்கு இழுத்து சுய நலச்சேற்றில் அழுத்தி விடுகிறது. ஆக, நமது பிரார்த்தனைகள் ஒரு சிறு வட்டத்திலேயே அடங்கிவிடுவது நிதர்ஸனம்.

தீப அன்பர்களே! எனது முதல் விண்ணப்பம்

1. With all sincerity let us start this from to-day.

நமக்கு அறிமுகமான அன்னியர் – அறிமுகமே ஆகாத அன்பர்கள் – விபத்தில் சிக்கி சிகிச்சை பெறுவோர் – நோயால் நலிந்து இன்னலுறுவோர் – ஆதரவு இன்றி அனாதை ஆக்கப்பட்டவர்கள் என ஒரு ஐந்து, ஆறு நபர்களை நினைவு கூறுங்கள்.

அவர்களுக்காக மட்டுமே, மனமுருக அன்றாடம் பிரார்த்தனை செய்யுங்கள். உங்கள் பிரச்சனைகளை – கவலைகளை மறந்துவிடுங்கள். பிறருக்காகத்தான் நமது பிரார்த்தனைகள் இருந்திட வேண்டும். நமது நலம் காக்கப்படும்.

2. மௌனம் பேசும் – Stillness Speaks

“மௌனம் கலக நாசம்” “மௌனம் சர்வார்த்த சாதகம்” இந்த இருமுது மொழிகளையும் கேள்விப்பட்டிருப்பீர்கள். பிரயோகப்படுத்தியும் இருப்பீர்கள். கலகம் – குழப்பம் – குரோதம் – வாய்ச்சண்டை வன்முறை என படிப்படியாக பல பரிமாணங்களில் சினம் வெளிப்பட அடிப்படையான அமைந்திடுவது வாய்ச்சொல் – வன் சொல் அல்லவா?

ஐம்புலன்கள் என்று நம்மால் அறியப்பட்டு கண்டு, கேட்டு, உண்டு, உயர்த்து, உற்று அறிந்திட உதவும் ஐம்புலன்களில் உண்ண, உயர் வாழ்ந்திட உதவிடும் வாய் மட்டும் இரண்டு பணிகளைச் செய்கிறது! உயிரை உடலில் தக்க வைத்திட உணவு, உயிரை உன்னதமாக்கிட உதவுவது எண்ணம், பேச்சு, மற்ற நான்கு புலன்களும் ஒரே ஒரு வேலையைதானே செய்கிறது. கண் பார்க்கிறது. காது கேட்கிறது. மூக்கு சுவாசிக்கிறது. சருமம் தொடு உணர்வைத்தருகிறது. ஆனால் வாய் மட்டும இரண்டு வேலைகளைச் செய்கிறதே? இதற்கு மட்டும் ஏன் இரட்டிப்பு வேலை?

ஆண்டவன் படைப்பின் சூட்சமம் இங்கேதான் அடங்கியிருப்பதாக தனது அருளுரையில் மகா பெரியவர் சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி சுவாமிகள் விளக்குகிறார். அவர் அருளுரை அப்படியே –

‘‘நமது வாய் சாப்பிடுவது, பேசுவது என்று இரண்டுகாரியம் இருப்பதாலேயே, இரண்டையும் பாதியாக குறைத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் பரமேசுவரனின் அபிப்ராயமாக இருக்க வேண்டும். கண்டதை தின்று கெடுதலை வர வழைத்துக் கொள்ளாதே, வாயில் வந்ததை பேசிக்கொண்டே போகாதே” எளிமையான சொற்களால் அவர்

வழங்கிய போற்றுதலுக்குரிய பொன்மொழிகள்.

உங்கள் மௌனம், நீங்கள் பேசிச்சாதிக்க இயலாததை சாதித்துக்காட்டும். உங்கள் மௌனம் உங்கள் எண்ணங்களின் வலிமையைக்கூட்டும், ஆற்றலைப் பெருக்கும்.

உங்கள் மௌனம் உங்களின் அனைத்து செயற்பாடுகளிலும் சாதகத்தை – வெற்றியைத் தரவுள்ளது. குறைவாகப் பேசுவோம். குறைகளைப் பேசவே மாட்டோம். அனுதினமும் அரை மணியாவது முழு மௌனம் அனுஷ்டித்து தியானம் செய்வோம். இதுவே எனது இரண்டாவது விண்ணப்பம்.

3. இன்னுரை, நல்லுரை, இது மூன்றாவது விண்ணப்பம்.

**"யாவர்க்கும்மாம் பிறர்க்கு இன்னுரைதானே"** என திருமூலர் அருளியதை நான் அப்படியே திருப்பி சொல்லப் போவதில்லை. சற்று கூடுதலாக, இன்னுரையோடு ஒரு நல்லுரையும் அன்றாடம் ஐந்து அன்பர்களிடம் பகிர்ந்து கொள்வது என்று ஒரு சங்கல்பம் – உறுதி செய்துகொண்டால் என்ன? என்ன நல்லுரையைச்சொல்வது? நாம் சொன்னால் ஏற்பார்களா?

சொல்லப்போவது நல்லுரை என்பதால் யாருக்கும் எந்த பங்கமும், சங்கடமும் ஏற்பட வாய்ப்பேயில்லை. அப்படியே அவர்கள் கேட்க விரும்பாமல் போனாலும் ஒரு பாதகமும் இல்லை. உங்கள் நல்லுரை பிரபஞ்சத்தில் சஞ்சரிக்கும் ""You will fill the universe with Good Thoughts'' சென்று சேர வேண்டியவர்கட்கு, பெற விரும்புவோரிடத்தில் தவறாமல் சேர்ந்திடும். உடனடி பலன் எதிர்பார்த்திடல் நமது பணி அல்ல. நல்லுரை வழங்குதல் – நற்பணி ஆற்றுதல் நம்பணி அவ்வளவே! என்ன நல்லுரை?

**"புகையை பகையென மறுத்திடுதல் நன்றென"**
புகைபிடிப்போர் இரண்டு பேரிடமாவது சொல்லுங்கள்.

**"தன்வயம் இகழச்செய்யும் மதுவை மறந்திடுங்கள்"** என இன்சொல்லால் கனிவுடன் இருவரிடம் சொல்லுங்கள். அன்றாடக் கடமையென 4–5 பேரிடமாவது நல்லுரையை இன்னுரையாக வழங்குங்கள். மூன்று விண்ணப்பங்களை நன்கு பரிசீலியுங்கள், நடைமுறைப்படுத்துங்கள். இப்பிறவிப் பெருங்கடலை எளிதாகக் கடக்கலாம். ஏனெனில் இறைவனின் விருப்பங்கள் இவைகள்தான் இவையே, மரணமிலாப் பெருவாழ்விற்கான திறவு கோலாக அமைந்திடும்.







1. வள்ளல் பெருமான் 1867 ஆம் ஆண்டில் கட்டிய சத்திய தருமசாலை
2. சத்திய தருமசாலையின் சமையல் அறை 3.அணையா அடுப்பில் தயாராகும் உணவு

**வெருள் மன மாயை வினைஇருள் நீக்கிஉள்**
**அருள் விளக்கேற்றிய அருட்பெருஞ்ஜோதி**

# “ஆலயந்தொழுவது சாலவும் நன்று”

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஔவையின் வாக்கு! நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மகாகவி பாரதியார், ஆலயங்கள் பற்றிச் சொன்ன கருத்து. அவர் வார்த்தைகளில்:–

“மிருக நிலையிலிருந்து மனிதரை தேவநிலைக்கு கொண்டு சேர்க்கும் பொருட்டாக ஏற்படுத்தப்பட்ட தேவபள்ளிக்கூடங்கள் கோயில்களாகும்” இது மகாகவி பாரதியாரின் வாக்கு. இவர் ஏன் மகாகவி? ஐயந்திரிபற்ற, அழுத்தமான, வலிமையான வார்த்தை பிரயோகம், சமூகநலம் – முன்னேற்றம் பற்றிய தீவிரவாதி, துணிச்சல் மிக்க சொல்லேர் உழவர் இந்த மகாகவிக்கு இதுவே அடையாளங்கள்.

ஔவை காலத்திற்கும் – பாரதியார் காலத்திற்கும் இடையே ஆயிரம் ஆண்டுகள். இருவர் கூற்றையும், ஆழந்து நோக்கின், ஓர் அரிய உண்மை புலப்படுகின்றது.

மாமனிதனின் அற்புத சிருஷ்டிதான் ஆலயம். பாரதியின் கூற்றை இன்னொரு முறை படித்தால் எனக்குப் புரிந்த கருத்து – மனிதனின் நிலை மாற்றத்திற்குரிய தேவைகளை வழங்கும் பயிலகம் – பள்ளிக் கூடங்கள்தான் ஆலயங்கள்.

இன்னும் சற்று எளிமையான வார்த்தைகளில் சொன்னால் ஆலயங்கள் கடவுளின் super market. அங்கே மனிதன், தன்னை உயர்த்திக் கொள்ள தேவையான அனைத்தும் குவிக்கப்பட்டுள்ளது.

மனித அறிவையும், ஆற்றலையும் உயர்த்த உதவும் வாய்மை, நேர்மை, வல்லமை, வலிமை இவைகள் அபரிமிதமாக கொட்டிக்கிடக்கும் POWER HOUSE ENERGY CENTER சக்தி நிலையம் தான் ஆலயம்.

ஆலயங்கள் மனிதனுக்கு கிடைத்திருக்கும் சக்தி நிலையம். ஆற்றல் களஞ்சியம். அன்பு அருவி, அறிவுச்சுடர் ஆலயத்திலிருந்து அள்ளிக்கொண்டு வர இத்தனை செல்வங்கள் இருந்தும் மனிதன், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஏன் சாமான்யனாகவே வாழ்ந்து மடிகிறான்? தொழுது கொண்டே வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதனில் பெரும்பான்மையோர் மிருக நிலையிலிருந்து மீளவில்லையே! ஆலயங்கள் புதிது புதிதாகக் கட்டப்படுகின்றன. பழையவை புதுப்பிக்கப்படுகின்றன.

ஆறு காலப்பூஜைகள்,அபிஷேக அலங்காரங்கள், உற்சவங்கள் பிரம்மோற்சவங்கள். இன்ன ஊரில், இன்ன மாதத்தில், இன்ன உற்சவம்

என இந்தியா முழுமையும் நகரங்கள் – நகர்ப்புறங்கள் – குன்றுகள் – மலைகள் – புண்ய நதிகள் என ஆயிரக்கணக்கில் இலட்சக்கணக்கில் மனிதர் கூடித்தொழுத வண்ணம் இருக்கின்றனர். அவ்வப்போது விபத்துக்களால் மடிந்த வண்ணம் உள்ளனர்.

மனிதன் உயர்ந்தானா? மாமனிதனாக உயர்ந்தவர்கள் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகத் தானே இருக்கிறது. ஆகவே எங்கோ ஒரு குறை இருக்கிறது? என்ன அது?

**கடவுளின் கடையிலிருந்து பெற வேண்டியவைகளைப் பெறாமல், கடைக்குச் சென்று வேடிக்கை பார்த்துவிட்டு, வெறுங்கையோடு திரும்பிக் கொண்டிருக்கிறான் மனிதன். இதுதான் நூற்றாண்டுகளாக நடந்து கொண்டிருக்கிறது. இன்றும் இதே நடைமுறைதான்.**

It is Time to Review.

ஔவை வாக்கையும், பாரதியின் வார்த்தைகளையும் நன்கு உள்வாங்கி, இன்றைய தொழுகைகளையும், வழிபாட்டு முறைகளையும், நடுநிலையாக நிதானமாக ஆழ்ந்து சிந்தியுங்கள்.

எப்படி தொழுகிறோம்? எதற்காகத் தொழுகிறோம்?

நமது விருப்பங்களை மட்டுமே விண்ணப்பிக்கிறோம். உடனடித்தீர்வு வேணும். இல்லையென்றால் கடவுளையே, ஆலயத்தையே மாற்றிக்கொள்கிறோம். செல்வம் கொழிக்கவைக்கும் கடவுள், நோய்களைப் போக்கிடும் கடவுள், திருமணம் அமைந்திட கடவுள், மகப்பேறுக்குக் கடவுள், கண்ணொளி தந்திட கடவுள், கடன் நிலுவை வசூலாகக் கூட கடவுள், என மனிதன் ஊர் ஊராக விண்ணப்பங்களை ஏந்தி வலம் வந்த வண்ணம் இருக்கிறான்.

**"மனத்துக் கண் மாசிலன் ஆதல்**
**அனைத்தறன் ஆகுல நீரபிற"** – குறள்34

''அனைத்து அறங்களும் குற்றமில்லா, கள்ளமில்லா, கபடமில்லா, மாசில்லா மனத்தினின்று ஊற்றெடுக்கும். பிற அனைத்தும் வெறும் ஆரவாரங்களே". ஆக மனிதனுக்கு வேண்டியதெல்லாம் மாசற்ற மனம். இதைத்தானே இவன் கடவுளிடம் கேட்க வேண்டும். உள்ளத்தூய்மை, எண்ணங்களில் ஏற்றம், இவைகளை வழங்க அவன் காத்திருக்கும் போது வாங்கி கொள்ள மனிதன் தயங்குகிறான்.

மாறாக மனிதன் கேட்பதெல்லாம், கோயில் கோயிலாகச் சென்று பிரார்த்திப்பதெல்லாம். "தேர்வில் வெற்றி பெற வேண்டும். மகப்பேறு

வேண்டும். மகளுக்கோ, மகனுக்கோ திருமணம் கூட வேண்டும். சொத்துகுவிதல் வேண்டும். நோய்கள் நொடியில் அகல வேண்டும்". இவைகள் தான் மனிதனின் இன்றைய விண்ணப்பங்கள். செங்கல் சூளை போட்டிருப்பவன் மழைவராமல் இருக்கப் பிரார்த்திக்கிறான். வாடிய பயிரைக் காப்பாற்ற, விவசாயி மழை பெய்ய வேணுமென்று பிரார்த்திக்கிறான்.

இரண்டு பேருமே மனமுருகப் பிரார்த்திக்கிறார்கள். என் செய்வான் இறைவன்? Bonus முதலான கோரிக்கைகள் நிறைவேற நிர்வாகம் சம்மதிக்க வேண்டுமென்று தொழிலாளி பிரார்த்திக்கிறான். குறைந்த அளவு கோரிக்கைகளை மட்டும் நிறைவேற்றி தொழிலாளிகளை ஏமாற்றிட நினைத்திடும் முதலாளிகளும் ஆண்டவன் அருளை நாடுகிறார்கள். என்ன செய்வான் இறைவன்? கொள்ளை அடித்தவனும் காப்பாற்று என கெஞ்சுகிறான் – கொள்ளை கொடுத்தவனும் எப்படியாவது பொருள் கிடைத்திட வழிசெய்திடு என்று முறையிடுகிறான். என்ன செய்வான் இறைவன்? தேர்தலில் வெற்றிபெற போட்டியிடுவோர் அனைவருமே பிரார்த்திக்கிறார்களே! என்ன செய்வான் இறைவன்!!! மனிதன் ஒன்றை நன்றாகத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

மனிதன் விரும்புவதையெல்லாம் வழங்குகின்ற அமைப்பல்ல ஆலயம். அதில் உறையும் ஆண்டவன் சமைத்த உணவை பரிமாற மாட்டான், சமைக்கும் அறிவையும், ஆற்றலையும் வழங்குவதற்குத்தான் காத்திருக்கிறான்.

ஆலயம் தொழுவோம். அர்ப்பணிப்போடு தொழுவோம். ஆரவாரமின்றித் தொழுவோம். உள்ளத்தூய்மைக்காகத் தொழுவோம். எண்ணங்களின் வலிமைக்காகத் தொழுவோம். ஊனமுற்றோர், ஊனம் அற்றோராக நலமும், நல்வாழ்வும் பெற்றிட, பிரார்த்திப்போம். மாமனிதனாக முயல்வோம்! உயர்வோம்!! சக மனிதர்களை உயர்த்துவோம்!!!

**உலகெலாம் பரவஎன் உள்ளத்து இருந்தே**
**அலகிலா ஒளி செய் அருட்பெருஞ்ஜோதி**